# "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து முகாமில் பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைந்து நடவடிக்கை எடுக்க துறை செயலாளர்களுக்கு அறிவுரை!

**சென்னை, செப். 15 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (13.09.2025) தலைமைச் செயலகத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், முகாமில் பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், துறை வாரியாக பெறப்பட்ட மனுக்கள், அதன் மீதான தீர்வு மற்றும் நிலுவை விவரங்கள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்து, உரிய கால கட்டத்திற்குள் தீர்வு காணப்படுவதை கண்காணித்திடவும் துறை செயலாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அப்போது, இதுவரை நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் அரசின் 15 துறைகளில் பட்டியலிடப்பட்ட 46 சேவைகளில் வரப்பெற்ற 14,54,517 மனுக்களில், 7,23,482 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றும், தீர்வு செய்யப்பட்ட மனுக்களில், 5,97,534 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும், இது தீர்வுசெய்யப்பட்ட மனுக்களில் 83% ஆகும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கப் பட்டது.

முதலமைச்சர் அவர்கள், தகுதியுள்ள அனைத்து மனுக்களும் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், குறிப்பாக, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை, ஆதி திராவிடர் நலத்துறை, எரிசக்தி துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை போன்ற முக்கியத் துறைகளின் மனுக்கள் மீது அதிக கவனம் செலுத்திட வேண்டும் என்றும், நகராட்சி நிர்வாகத் துறையில் சொத்து வரி, குடிநீர் தொடர்பான கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

வேளாண்மைத் துறையில், விவசாய பெருமக்களின் தேவைகளான இடுபொருட்கள், விவசாய இயந்திரங்கள் தொடர்பான மனுக்களின் மீது அதிக கவனம் செலுத்தி, விவசாய பெருமக்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் என்றும், ரேஷன் கார்டுகளில் முகவரி மாற்றம் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டா சம்பந்தமான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

அதேபோன்று, மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடர்பான கள ஆய்வுகளை விரைந்து முடித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், முகாம்கள் நடைபெற்றபோது மக்கள் தெரிவித்த கருத்துகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். குறிப்பாக, தெருவிளக்கு, இணைப்பு சாலை, குடிநீர் போன்ற சமுதாய கோரிக்கைகள் தொடர்பான மனுக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை பொறுத்தவரை மக்கள் அளிக்கும் அனைத்து மனுக்கள் மீதும் விடுதலின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், அதற்காக அனைத்து அரசு துறைச் செயலாளர்களிடமும், மாவட்ட ஆட்சியர்களிடமும் தலைமைச் செயலாளர் அவர்கள் தொடர்ச்சியாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, பணிகளை ஒருங்கிணைத்து, மக்களின் மனுக்களுக்கு தீர்வு காணப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட வழிகாட்டுதலின்படி, வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியினை சிரத்தையுடன் கண்காணிக்கவும், பெறப்படும் மனுக்களின் மீது உரிய கால கெடுவிற்குள் சரியான தீர்வினை வழங்குவதை உறுதி செய்யவும், அனைத்து துறைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், முதல்வரின் முகவரித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### திருச்சி மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்கள் செய்துள்ளோம்

# விஜய் போகிற போக்கில் குறை கூறக்கூடாது!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!



திருச்சி, செப்.15-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களை சந்தித்து மொழி மானம் காக்க தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்று ஒவ்வொரு வாக்குசாவடிகளில் உறுதிமொழி ஏற்பு குறித்தும் செப்டம்பர் 20 அன்று நடைபெறும் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான விளக்க பொதுக்கூட்டம் பற்றிய விவரங்களை குறித்தது பேசினார்

தொடர்ந்து விஜய் திருச்சி மாவட்டத்தில் வளர்ச்சி இல்லை என கூறியது குறித்து கேள்விக்கு?

தேர்தலுக்கு இன்னும் 5 மாதங்களே உள்ள நிலையில் புதிதாக கட்சி தொடங்கியவர்கள் , எதிர்க்கட்சிகள் பிரச்சாரம் மேற்கொள்வது வழக்கம்

தங்களை முன்னிறுத்தி யார் என்ன செய்தார்கள் நாங்கள் வந்தால் என்ன செய்வோம் என கூறுவது வழக்கம்

நேற்று விஜய் கூட்டம் கூட்டி உள்ளார்.

நேற்று சென்னையில் முதல்வர் கையால் பணி ஆணை வழங்கி ஆக்கபூர்வமான நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம்..

நேற்று விஜய் தொண்டர்களிடம் பேசும்போது கேக்கலை கேக்கலை என கூறி உள்ளார்.

கேக்கல கேக்கல என்பதை விட நீங்கள் திருச்சியின் வளர்ச்சியை சரியாக பார்க்கலை

நகராட்சி நிர்வாகத்துறை சார்பில் திருச்சியில் 128 கோடி மதிப்பீட்டில் அண்ணா கனரக வாகன சரக்கு முனையம், 236 கோடி மதிப்பீட்டில் பெரியார் பெயரில் காய்கறி அங்காடி , 408 கோடி மதிப்பீட்டில் பஞ்சப்பூர் பேருந்து முனையம் ஏர்போர்ட்க்கு நிகராக அமைந்து உள்ளது. 400 கோடி மதிப்பீட்டில் டைடல் பார்க், மணப்பாறையில் சிப்காட், மணப்பாறையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வந்துள்ளது

திருவெறும்பூர் பகுதியில் அரசு மாதிரி பள்ளி, விடுதி, ஒலிம்பிக் அகாடமி, சூரியூர் ஜல்லிக்கட்டு மைதானம் அமைய உள்ளது. பொங்கல் அன்று பிரம்மாண்ட ஜல்லிக்கட்டை நடத்த உள்ளோம். திருச்சி கிழக்கு தொகுதியில் காமராஜர் பெயரில் நூலகம் அமையவுள்ளது, மாநகராட்சி பகுதியில் 7.75 கோடி மதிப்பீட்டில் 4 கல்விசார் மையம் நூலக வசதியுடன் அமைத்து உள்ளோம், பறவைகள் பூங்கா, மேலும் பல புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதேபோல பல்வேறு நலத் திட்டம் வழங்கி உள்ளோம். மேலும் காலை உணவு திட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் 1200 பள்ளிகளில் 69369 மாணவர்கள் பயனடைக்கின்றனர். நான் முதல்வன் திட்டம் மூலம் 68000 இளைஞர்கள் பயன்பெற்று உள்ளனர் கலைஞர் உரிமைத் தொகை 4.42 லட்சம் குடும்பங்கள் பயன்படுகின்றனர். விடியல் பயணம், 73000 பட்டா வழங்கி உள்ளோம், மேலும் நலம் காக்கும் ஸ்டாலின், உங்களுடன் ஸ்டாலின், தாயுமானவர் திட்டம் உள்ளிட்டவை திருச்சி மாவட்டத்தில் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என நான் சொல்வது குறைவு பல்வேறு துறைகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி வருகிறோம் அமைச்சர்களாக திருச்சி மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களை கொண்டு வருகிறோம் திருச்சி மாவட்டத்திற்கு திட்டம் செல்கிறது என யாராலும் கூறினாலும் தமிழ்நாட்டின் மையப் பகுதி திருச்சி என கூறுவார்.

திருச்சி தமிழகத்தின் இரண்டாம் தலைநகரமாக உருவாக அனைத்து திட்டங்களும் செய்து உள்ளோம்.

நான்கரை ஆண்டு காலத்தில் திருச்சிக்கு எவ்வளவு முடியுமோ செய்துள்ளோம் இன்னும் செய்ய வேண்டும் என ஆசை எனவே விஜய் இது நாங்கள் செய்துள்ளோம் இது செய்யவில்லை என கூற வேண்டும் பொத்தம் பொதுவாக கூறக்கூடாது அதை அறிவார்ந்த திருச்சி மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எதையும் பகுத்தறிந்து பார்ப்பார்கள் என தெரிவித்தார்.

மேலும் வேறு எந்த கட்சிக்கும் நிபந்தனை இல்லை என்னுடைய கூட்டத்துக்கு மட்டுமே நிபந்தனை விதிப்பது தி.மு.க. என்னை பார்த்து பயந்து விட்டதாக விஜய் கூறுகிறார் என்ற கேள்விக்கு?

பொதுவாக கட்டுபாடுகள் விதிப்பது உண்டானது நேற்று விமான நிலையத்திலிருந்து வரும்போது நமது வரிப்பணத்தில் கட்டப்பட்டவைகளை மொத்தமாக சிதைத்து விட்டு செல்வதை பார்ப்பது வயிற்று எரிச்சலாக உள்ளது மேலும் சையது முதுஷா பள்ளியில் ஏறி மேற்கூரை உடைத்து அங்குள்ள கழிப்பறையை வீணடித்து சென்று உள்ளனர். கும்பலில் சந்தோஷமாக இருங்கள் யாரையும் நாங்கள் எதிரியாக பார்ப்பது இல்லை என தெரிவித்தார் விஜய் தி.மு.க.வை பாய்சன் என விமர்சிக்கிறார் என்ற கேள்விக்கு?

முதல் பிரச்சாரத்தில் பல இளைஞர்கள் வந்துள்ளனர்.

இளைஞர்களுக்கு நாட்டு நடப்பு பற்றி சொல்ல வேண்டும்.

குழந்தைகளை மனதை பிடித்து விட்டேன் எனக் கூறுபவர்

கொள்கை எதிரி ஏன் இன்னும் கல்வி நிதி விடுவிக்க வில்லை அதை ஏன் என பேச வேண்டும், SIR குறித்து பேச வேண்டும் இப்படி நாட்டு மக்களுக்கு தேவையாதை பேச வேண்டும் அவர் குறுகிய மனதுடன் பேசி உள்ளார் என தோன்றுகிறது.

கிட்னி திருட்டு குறித்த கேள்விக்கு?

சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் உரிய பதில் கூறி உள்ளார் என தெரிவித்தார்

தேர்தல் வருவதால் உண்மைத்தன்மை அறியாமல் பேசி வருகின்றனர்.

ராகுல் காந்தியின் வாக்குரிமை குறித்து விஜய் பேசியது மேலும் காங்கிரஸ் மீது விமர்சனம் செய்யாதது காங்கிரசை கூட்டணிக்கு இழுக்க முயற்சியா என்ற கேள்விக்கு?

இதை அரசியல் சார்ந்து பார்க்கவில்லை ஜனநாயகத்திற்கு குரல் கொடுப்பது தி.மு.க.வின் குரலாகவே பார்க்கிறேன்.

பெரம்பலூர் பரப்புரையை விஜய் மேற்கொள்ளவில்லை என்ற கேள்விக்கு?

விஜய்க்கு திட்டமிடல் இல்லை பேசும்போதே மைக் ஆஃப் ஆகிவிட்டது என தெரிவித்ததார்.

இந்தநிகழ்வில் மாநகர செயலாளர் மதிவாணன், மாவட்ட நிர்வாகி செங்குட்டுவன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---



முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி அவர்களின் 97வது பிறந்த நாளை முன்னிட்டு ஆடுதுறையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் க.அன்பழகன் எம்.எல்.ஏ. துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, டி.பழநிவேல், முன்னாள் எம்.பி, செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---




75 ஆண்டுகளாக இந்தச் சமூகத்தில் மாற்றங்கள் பல ஏற்படுத்தி, தலைசிறந்த தமிழ்நாடாக நாம் தலைநிமிர்ந்து நடைபோட வித்திட்டவர் நம் பேரறிஞர் அண்ணா !

–மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

பேரறிஞர் அண்ணா
அவர்களின்
117ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
பேரறிஞர் அண்ணா அவர்களின்
திருவுருவச் சிலைக்கு
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பங்கேற்கிறார்கள்.

நாள்: 15.9.2025 திங்கட்கிழமை | நேரம்: காலை 10.00 மணி | இடம்: அண்ணா சாலை, சென்னை

செ.ம.தொ.இ / 1072 / வரைகலை / 2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009